# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2142 - 2019 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2019.09.20

*2142 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 202 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 203 |


***கவனிக்க.***– தேருநர்களை பதிவுசெய்தல் (திருத்தம்) சட்டமூலம் 2019, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


201- B 81561 - 353 (2019/09)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேற்கு மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1994.02.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 39609 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான மடிகெ மிதியால, பண்டாரகொஸ்வத்த எனும் முகவரியில் வசிக்கும் உதுமா லெப்பே குருன்னஹலாகே அஹமது லெப்பே என்பவருக்கு கையளிக்கப் பட்டு, குருநாகல் மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் D 223/1083/ 94 ஆம் இலக்கத்தின் கீழ் 1994.03.22 ஆந் திகதி பதிவுசெய்யப் பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.10.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தின், பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் தேவமெதி ஹத்பத்து திஸ்ஸவ கோறளையிலுள்ள 1360 - மடிகெ மிதியால கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மடிகெ மிதியால எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குருநாகல் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2265 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இரேகை 207 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டெயார் / ஏக்கர் 0.431 றூட் ......... பேச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு. காணியின் பெயர் : கோல மறந்ததிஹேன.

வடக்கு : துண்டு இலக்கம் 205 ;
கிழக்கு : துண்டு இலக்கம் 208 ;
தெற்கு : துண்டு இலக்கம் 10 C;
மேற்கு : துண்டு இலக்கம் 206.

என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர,
பிரதேச செயலாளர் (வே.பா.),
பண்டுவஸ்நுவர மேற்கு.

2019, யூன் 04.

09-768/1

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேற்கு மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1993.03.06 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 35740 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான அதுவன்முல்ல, மண்டாபொல எனும் முகவரியில் வசிக்கும் மஹாசாரி நைதெலாகே சமாரிஸ் ஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு, குருநாகல் மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் D 233/ 1799/ 93 ஆம் இலக்கத்தின் கீழ் 1993.07.05 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கை யிடப்பட்டுள்ளது ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.10.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தின், பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் தேவமதி பற்றில் கிராதலான கோறளையிலுள்ள 1353-திக்கலகெதர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அதுவன்முல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குருநாகல் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப் பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 1728 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இரேகை வரைதலில் 33 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டெயார் / ஏக்கர் 0.225 றூட் பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு. காணியின் பெயர் : தல்கஹமுலஹேன.

வடக்கு : துண்டு இலக்கம் 32 ;
கிழக்கு : பலதொர கோராலாவின் எல்லை ;
தெற்கு : துண்டு இலக்கம் 34 ;
மேற்கு : துண்டு இலக்கம் 22.

என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர,
பிரதேச செயலாளர் (வே.பா.),
பண்டுவஸ்நுவர மேற்கு.

2019, யூன் 04.

09-768/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/22087 (xxi).
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :- சிபிசி/எல்சி/எல்டி/4/1/4/552.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 691, குண்டசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குண்டசாலை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பிபி மஹ 5253 எனும் வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 16 என காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0529 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. முதியன்சேலாகே குமுது சமன் ஸ்ரீ ரத்நாயக என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : 07, 08, 09 ;
கிழக்கு : 15 ;
தெற்கு : 19 ;
மேற்கு : 17.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2019.08.08 தொடக்கம் 30 வருடங்கள் முன்நோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1994 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப் படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்து இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50% அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்.

தவணைப்பணம்.- வருடாந்த குத்தகையின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஈ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(உ) 2019.08.08 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், குடும்பத்தினுள் அல்லது இந்தக்காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது மாற்றம் செய்தல் தவிர்ந்த, வேறு எவ்வித கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதியளிக்கப்படமாட்டாது ;

(ஊ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்.

(எ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப் படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப் பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமைமாற்றம் செய்யப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. அயோத்யா எஸ். ஜயவர்தன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 20.

9-553

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/60131.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :- EP/ 28/ LB/ / LS/ Tri/ T&G/ 205.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஆண்டாங்குளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் PP Tri 30 ஆம் இலக்க வரைபடத்தில் 579 மற்றும் 580 ஆம் இலக்க காணித்துண்டுகளுக்காக வரையப்பட்ட 1039 ஆம் இலக்கச் சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.1022 ஹெக்டயார் விஸ்தீரண முள்ளதுமான அரச காணியை மத வழிபாட்டு நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு வணக்கத்துக்குரிய பேராயர் அவர்கள் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப் படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 561 (பாதை) மற்றும் 578 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 578 மற்றும் 581;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 581, 582, 583 மற்றும் 584;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 584 மற்றும் 561 (பாதை).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.07.08 தொடக்கம் முப்பது வருடங்கள் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/ 2 % வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி மத வழிபாட்டு நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(ஊ) கட்டப்பட்டுள்ள /கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2019.07.08 ஆம் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகையின் நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமே அனுமதிக்கப்படும் ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. கே. என். செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 20.

09-554

---

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. :4/10/51277
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : EP/28/LB/LS/BAT/MNW/11

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வவுணதீவு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த காந்திநகர் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் கள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 20 பேர்ச்சஸ் விஸ்தீரண முள்ளதுமான அரச காணியை தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கும் வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்கு தருமாறு கேட்டு டயலொக் அக்ஷியாடா பி. எல். சி. நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : அரச காணி ;
தெற்கு : ஆர். டி. எஸ். கட்டிடம் ;
மேற்கு : எருநிரிவில் பாதை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2019.07.18 ஆந் திகதியிலிருந்து 2049.07.17 வரை)

**வருடாந்தக் குத்தகை**.- 2019 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000.00) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தை, சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000.00) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- தவணைப்பணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) 2019.07.18 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதியளிக்கப்படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஜி. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 20.

09-729